சிவமயம்

gistered as a News paperin Ceylon
P. M. G. NO. H. A
89/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புந். ருஅ] யாழ்ப்பாணம்—வியஹு மார்கழிீ கூஉ (1946 டிசம்பர் 24 செவ்வாய்க்கிழமை) [இல எகூ

# ஓலம் போடுகிறார்!

## தென்னாபிரிக்க வெள்ளையர் சீற்றம்!

சேனாதிபதி ஸ்மட்ஸ் தென்னாபிரிக்காவுக்கு மீண்டுவிட்டார். அங்கே போனதும் தனது இனத்தவரைக் கண்டு அவர்களுடன் கூடி ஓர்பாட்டம் ஒப்பாரி கூறினார். தென்னாபிரிக்கா இந்தியர் விஷயமாகவும், தென்மேற்கு ஆபிரிககாவைத் தென் ஆபிரிக்காவுடன் இணைப்பது விஷயமாகவும் நாங்கள் எவ்வளவோ பிரசாரம் செய்தோம், இந்தியர்களை நாம் நீதியாகத்தான் நடத்துகிறோம். அங்கே இந்திய மக்கள் சுகமாக வாழுகின்றார்கள் என்றும், தென்மேற்கு ஆபிரிக்கச் சுதேசிகள் தென் ஆபிரிக்காவுடன் சேரத் துடியாய்த் துடித்துக் கொண்டு நிற்கிறார்கள் என்றும் சொன்னோம. நாங்கள் எப்படிக் கூறியும் என்ன? எங்கள் கூற்றுக்குச் செவிமடுப்பாரில்லை. சர்வதேச நீதிஸ்தலத்தில் இப் பிரச்சினையை விடுத்து ஓர் தீர்ப்புப் பெறுவோம் என்று கூறினோம். அதனையும் இச்த ஸ்தாபனம் கேட்காது எமக்கு விரோதமாகத் தீர்த்துவிட்டது.

"ஆனல் இப்போதுதானும் ஒன்றும் மூழ்கிவிடவில்லை இந்தியாவும் நாமும் இவ்விஷயமாக ஓர் சமரசத்துக்கு வரவேண்டும் என்றும், நாம் செய்யும் முடிபுகளைத் தனக்குத் தெரிவிக்கவேண்டும் என்றும் ஐக்கியதேச ஸ்தாபனம் தீர்ப்பளித்திருக்கிறது. எனவே, இவ்விஷயம் இன்னும் முடியவில்லை, ஐக்கியதேச ஸ்தாபனத்துப் பிரதிநிதிகளிற் பலர் உண்மை நிலையை விளங்காமல் இப்படியெல்லாம் தீர்த்துவிட்டார்கள்" என்று சேனாதிபதி ஸ்மட்ஸ் தம் மக்களிடையே சென்று பிரலாபிக்கின்றார்.

இவர் கூற்று இவ்வாறாக, தென்னாபிரிக்காவின் திரான்ஸ்வால் மாகாணத்துத் தேசாதிபதியான சேனாதிபதி பீனார் என்பவர் அங்கே ஓர் கூட்டத்திற் பேசும்போது "புறநாட்டவர் எங்கள் சொந்த விஷயத்திற் பிரவேசித்து, இதனைச் செய், இதனைச் செய்யாதே என்று எமக்கு விதிப்பதையும், ஆஞ்ஞாபிப்பதையும் நாங்கள் ஒருபோதும் சகிக்கமாட்டோம். கடைசிவரைக்கும் நாம் எதிர்ப்போம்" என்று குறிப்பிட்டார்.

இப்போதுள்ள ஐக்கியதேச ஸ்தாபனத்தை ஸ்தாபிதம் செய்தவர்களில் சேனாதிபதி ஸ்மட்ஸும் ஒருவராவர், அப்படிப்பட்ட அவரே இன்று அந்த ஸ்தாபனத்தின் தீர்ப்புக்கு எதிராகப் பிரசாரம் புரிந்து வருகிறார். வேலியே பயிரை மேய்வதுபோல இருக்கிறது அவருடைய போக்கு! நீதி, நியாயம் என்பன வெள்ளையர்க்கு வேறு, கறுப்பர்க்கு வேறாக இருக்கவேண்டும் என்பது இந்த நிறத்திமிர் பிடித்தவரின் அபிப்பிராயமபோலும், ஆனல், அந்தக்காலம் மலையேறிவிட்டது.

கேவலம் தோலுக்குள் உள்ள சில கோளங்கள் குறைவாயிருப்பதனாலேயே இவர்களுக்கு வெள்ளை நிறம் ஏற்பட்டிருக்கிறதன்றி, வேறெந்தக் காரணத்தாலும் அல்ல. இதனை உலகத்து மக்கள் அனைவரும் உணர்ந்துவிட்டார்கள்.

## இலங்கையில் எஃகுத் தொழிற்சாலை

இலங்கையிலே எஃகு(உருக்கு)த் தொழிற்சாலை ஒன்றை ஸ்தாபிப்பதற்குக் கைத்தொழில் வர்த்தக அதிகாரியான மிஸ்ரர் டி. எச். பல்லூர் ஓர் திட்டம் வகுத்திருக்கிறார். அவருடைய திட்டப்படி அமைக்கப்படும எஃகுத்தொழிற்சாலைக்கு 11,500,000 ரூபா செலவு ஏற்படும் என்றும், லண்டனில் ஓர் பிரபல எஃகுத்தொழில் நிபுணத்துவச் சமுதாயத்துடன் கலந்தாலோசித்த பின்னரே இத்திட்டம் வகுக்கப்பட்டிருக்கின்றதென்றும் தெரிகிறது. இத் தொழிற்சாலையிலிருந்து பலவிதமான இரும்பு உருக்குப் பொருள்கள் ஆக்கப்படுமாம; கைத்தொழில் மந்திர நிருவாகசபையிடம் தமது திட்டத்தை மிஸ்ரர் பல்லூர் சமர்ப்பித்திருக்கிறார். இவ்விஷயமாக ஓர் முடிவையும் இன்னும் மேற்படி சபை செய்யவில்லை.

# அவர் சரியில்லை!

## லண்டனில் மிஸ்ரர் கொறியா

இலங்கை யரசாங்கம் இங்கிலாந்திலே தம் பிரதிநிதியாக மிஸ்ரர் ஜீ. ஸி. எஸ். கொறியா அவர்களைப் பெருந்தொகையான வேதனம் கொடுத்து வைத்திருக்கிறது. ஆனல் இவரால் இலங்கை வர்த்தகர் அதிகமான நன்மைகள் பெறமுடியாது என்று கொழும்பு இறக்குமதியாளர் சங்கம் கருதி, தனக்கென ஓர் பிரதிநிதியை இப்போது இங்கிலாந்துக்கு அனுப்பியிருக்கிறது.

மிஸ்ரர் கொறியாவுக்கு வர்த்தக விஷயமாகப் போதிய அநுபவம் கிடைக்காது. ஏதோ உத்தியோகார்த்தமாகக் கிடைக்கும் தகவல்களை விட வேறெவ்வாறு அவர்க்கு வர்த்தக விஷயமான நுணுக்கங்கள் தெரியும்? இங்கிலாந்திலே, உண்மையில் வர்த்தக அநுபவம் படைத்தவரையே இலங்கையரசாங்கம் தனது பிரதிநிதியாக வைத்திருக்க வேண்டும். ஆனல் இலங்கை மந்திரிகள் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு மாத்திரம் பட்டம் பதவிகள் கொடுப்பதற்காக லண்டனில் மிஸ்ரர் கொறியாவை நியமித்திருக்கிறார்கள். மிஸ்ரர் கொறியாவினுல் இலங்கைக்கு வியாபாரம் சம்பந்தமாக எவ்விதமான பலனும் கிடைக்கமாட்டாது என்று இலங்கை இறக்குமதியாளர் சங்கக் காரியதரிசி கூறுகிறார்.

இலங்கை இறக்குமதி வர்த்தகரின் பிரதிநிதி இங்கிலாந்திற்கு இவ்விஷயமாகப் போவதும் இலங்கை அரசாங்கத்துக்கு அவ்வளவு விருப்பமில்லையாம்.

# "உம்மாண்டி"

## பாராளுமன்றத்தில் பேச்சு

பிரிட்டிஷ் பாராளுமன்றத்துப் பிரபுக்கள் சபையிலே முந்திய இராஜப் பிரதிநிதியாயிருந்த லின்லித்கோ பிரபு, இந்திய விஷயமாகப் பேசும் போது, அமெரிக்காவுக்கு ஓர் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

"இந்தியாவிலே பிரிட்டிஷ் ஆட்சியைப்பற்றி அமெரிக்கர் பலர் குறை கூறுகிறார்கள். ஆனல் அவர்கள் கொஞ்சம், கண்ணைத் திறந்து, தங்கள் பசிபிக் சமுத்திரத்துக் கப்பால் பார்ப்பார்களானல், அங்கே ஓர்சிறிய கருமேகத்தைக் காண்பார்கள். அந்தக் கருமேகம் இப்போது சிறிதாகத்தான் இருக்கிறது. ஆனல் நாங்கள் இந்தியாவைவிட்டுப்போனல், இந்தக் கருமேகம் இந்தியாவிற்குள் நுழைந்து அக்கண்டத்தை மூடிவிடவும் கூடும்" என்று கூறினர்.

லின்லித்கோ பிரபு கருதிய கருமேகம் யாது? ருஷியாவா? ருஷிய உம்மாண்டியைக் காட்டி அமெரிக்கரின் அநுதாபத்தைப் பெறுவது பிரிட்டிஷ் இராஜ தந்திரிகளின் வழக்கமாய் விட்டதற்கு ஓர் உதாரணம் இது.

# எங்கும் சமத்துவம்!

## இருப்பதே லட்சியம்

— பண்டிதர் நேரு

சென்றவாரம் கல்கத்தா ஐரோப்பியர் வர்த்தக சங்கத்தில் பண்டிதர் நேரு ஓர் சொற்பொழிவு செய்தார். அதில், யுத்தகாலத்தில் செல்வராக வந்துள்ள சிலரைப்பற்றி அவர் குறிப்பிட்டுக் கூறியதாவது:

நடந்துமுடிந்தயுத்தத்தின்போதும் அதன்பின்னரும் இந்நாட்டிலே சிலர் குபேர சம்பத்துப் படைத்துவிட்டார்கள்; சிலர் இப்படிக் குபேர சம்பத்துப்படைத்திருப்ப, ஆயிரக்கணக்கான ஜனங்கள், பொருள் விலைகள் அதிகரித்துவிட்டபடியால்சீவியத்தை நடத்தமுடியாது இடர்ப்பட்டு வருகிறார்கள்.

"இப்படிச் செல்வம் படைத்தவர்கள், தங்கள்மீது விதிக்கப்பட்டுள்ள வருமான வரியையிட்டு மிகவும் குறைகூறுகிறார்கள், ஆனல் குறைகூறி அவ்வரியைச் செலுத்தியும் அவர்கள் இப்படித் தனவந்தர்களானது எப்படி? எங்கேயிருந்து இவர்களுக்கு இந்தச் செல்வம வந்தது? இதனைப் பற்றிக் கட்டாயம் விசாரணை செய்ய வேண்டும். இப்படியான நிலைமையை வளரவிடக்கூடாது.

"லட்சக் கணக்கான மக்கள் பட்டினியால் [illegible] தவிக்க, ஒருசிலர் [illegible] அநுபவிக்கும் நிலையை நான் அநுமதிக்க முடியாது. இதில் எங்கேயோ பொல்லாத ஊழல் இருக்கிறது, அதனைக் கண்டுபிடிக்க வேண்டும், கண்டுபிடித்துக் கட்டுப்பாடு செய்யவேண்டும். மனித சுபாவமே இதற்குக் காரணம் என்பர் சிலர். அப்படி என்றால் மனித சுபாவத்தையே நாம் மாற்றிக்கொள்ளுதல் வேண்டும்,

"இந்த 20-ம் நூற்றாண்டில், இலாபம் படைக்கும் மனப்பான்மை ஆகாது எல்லாரும் இன்புற்று சமத்துவ நிலையை அடையவேண்டும்."

# விடுதலை!

## அநுராதபுர விபத்து எதிரிகள்

அநுராதபுரப் புகைரத விபத்துச் சம்பந்தமாகச் சிறையாகிக் குற்றம் சாட்டப்பட்டுள்ள ஐந்து பேரும், சென்ற சனிக்கிழமை அநுராதபுரம் நீதிஸ்தலத்தில் நீதிபதி ஸ்ரீ என். கிருஷ்ணதாஸன் அவர்களால் நிரபராதிகளெனக் கண்டு விடுதலைசெய்யப்பட்டனர்.

அவர்களுக்கு எதிராகச் சாட்சியம் கூறியவர்கள் ஒன்றுக்கொன்று முரணை சாட்சியம் கொடுத்தபடியாலும், நம்பத்தகுந்த சாட்சியங்களை அளிக்காதபடியாலுமே எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

# இப்படியும் நடக்கிறது

## அரசாங்க சபையில் ஆள் மாருட்டம்?

அரசாங்கசபைக் கூட்டத்துக்கு அடுத்தடுத்து மூன்றுமாத காலத்துக்குச் சமுகமளிக்காவிட்டால், ஓர் அங்கத்தவர் தாமாகவே அங்கத்துவத்தினின்றும் நீங்கி விட்டதாகக் கருதப்படுவார், இதுதான் பிரமாணம்.

அரசாங்கசபையின் அங்கத்தவர் ஒருவர் செப்டெம்பர் மாதம் 25-ந் திகதி தொடக்கம் அரசாங்கசபைக் கூட்டங்களுக்கு வரவில்லை. எனவே, அவர் இந்த டிசெம்பர் மாதம் 25-ந் திகதியுடன் தம் பதவியை இழக்க வேண்டுமென்று எல்லாரும் எதிர்பார்த்தனர். ஆனல நவம்பர் மாதம் 26-ந் திகதி நிகழ்ந்த கூட்டத்தில் அவர் சமுகமளித்ததாகக் கூட்ட நடவடிக்கைகளிற் காட்டப்பகிறது இந்த அங்கத்தவர் சமுகமளிக்காதவிடத்திலே, இவருடைய பெயர் சமுகமளித்ததாக எப்படிக் குறிக்கப்பட்டது? இந்த மர்மத்தை அறிய சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி ஓர் விசாரணையை நிகழ்த்துவார் என்று தெரிகிறது.

## இத்தாலியப் புடவை

இத்தாலியிலிருந்து 60,000 யார் புடவை இலங்கைக்கு வந்திருக்கிறது. ஆ[illegible] பதியப்ப[illegible]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஆ
மார்கழி கூ உ செவ்வாய்க்கிழமை


## ஆயுர்வேத வைத்தியம் சிதைவுற்ற புராதனசின்னமா?

II

இப்பொழுது இலங்கை யரசினர் நியமித்ததாகிய சுதேச வைத்திய விசாரணைச் சங்கம் போன்ற சங்கமொன்று இற்றைக்கு 25 வருடங்கட்குமுன் சென்னை யரசினரால், இதே நோக்கத்துடன் நியமிக்கப்பட்டு, குறித்த விசாரணைச் சங்கம் பல இடங்களில் விசாரணை செய்து 1923-ம் ஆண்டில் தங்கள் விசாரணை யறிக்கையை மேற்படி யரசினருக்குச் சமர்ப்பித்துள்ளது; அதன்படிதான் 1924-ம் ஆண்டில் சென்னையிலே, இப்பொழுது நன்கு நடைபெற்று வருவதாகிய அரசாங்க இந்திய வைத்தியக் கல்லூரி தாபிக்கப்படலாயிற்று டக்ரர் விஜயஞரும்போன்று மேலைத்தேச அபிமானிகள் அந்தச் சமயத்திலும், இந்திய வைத்திய முறையின் மகத்துவத்தை உள்ளவாறு உணராமையால் தப்பான அபிப்பிராயங் கூறியது, அங்ஙனங் கூறியவர்கள் விஷய மறிந்தவர்களால் தக்க காரணங் காட்டிக் கண்டிக்கப்பட்டிருத்தலும், குறித்த விசாரணைச் சபையாரின் அறிக்கைப் பத்திரத்திற் படிக்கக்கிடக்கின்றன.

இந்த நாட்டிலேயுள்ள மக்கள் மேலைத்தேச வைத்தியத்தை அதிகம் விரும்புவதின்றிச் சுதேச வைத்தியத்தையே பெரிதும் விரும்புகிறார்களென இலங்கை ஆயுர்வேத விசாரணைச் சங்கத் தலைவர் சொன்னபோது டக்ரர் விஜயரும், அப்படியன்று மேலைத்தேச வைத்தியந்தான் இந்நாட்டு மக்களாற் பெரிதும் அபிமானிக்கப்படுகின்ற தென்னுங் கருத்துப்படக் கூறியுள்ளார், சுதேச வைத்தியத்தைக் கைக்கொள்வோர் இந்த நாட்டிலே நூற்றுக்குத் தொண்ணூறு விகிதமானேரெனச் சொல்லினும் மிகையாகாது; முற்காலத்திலே சுதேச வைத்தியர்களா யுள்ளவர்கள் தாங்கள் பரிகரிக்கும், இல்லையேற் சிகிச்சை செய்யும் நோயாளிகளின் பெயரைப் பதிந்து வைக்கும் வழக்கமில்லாதொழிந்தனர்; ஆனல் இக்காலத்துய சுதேச வைத்தியர்கள் தாங்கள் சிகிச்சை செய்த; செய்யும் நோயாளிகளின் நாமாவலியைப் பதிவுசெய்து வைக்கத் தொடங்கியிருக்கின்றனர். இந்தியாவிலும் மேலைத்தேச வைத்தியமுறை அரசினரால் ஆதரிக்கப்பட்ட போதும், அங்குள்ள மக்களுள், அவர்களுள்ளும் நாட்டுப்புறத்துள்ள மக்களுள் நூற்றுக்கு எண்பது தொண்ணூறு விகிதமானேர் ஆயுர்வேதம், சித்த வைத்தியம், யூனனி யென்னும் மூன்றையுங் குறிப்பதாகிய இந்திய வைத்தியமுறையையே அபிமானித்து வருகின்றனரென, சென்னை அரசினர் இந்தியவைத்தியக் கலாசாலைத்தலைமையாசிரியராக விளங்கிய கப்ரின் G. ஸ்ரீநிவாசமூர்த்தி B. A; B L; M. B. & C. M. அவர்கள் தமது அறிக்கையில் எடுத்துககாட்டியுள்ளார். மேலும் சுதேசவைத்தியத்தையே இந்நாட்டு மக்கள் பெரிதும் அபிமானித்து வருகிறார்களென்பதை டக்ரர் விஜயஞமவும் நாமும் இங்குள்ள ஏனையோரும் நேரிற் காணலாகுமே! கைப்புண்ணுக்குக் கண்ணுடி வேண்டுமா?

மக்கள் மேலைத்தேச வைத்தியத்தைப் பெரும்பாலும் அபிமானித்தலின்றிச் சுதேசவைத்தியத்தை அபிமானித்தற்குக் காரணமென்ன? காரணம் சில வுண்டு. உஷ்ணதேசத்தில் வசிக்கும் மக்களுக்கு, அத்தேசத்து முன்னோராற் செய்யப்பட்ட வைத்திய நூல்களை ஆதாரமாகக் கொண்டு செய்யும் ஔஷதங்களும், அநுபவ வைத்தியமுமே பெரிதும் பயன்படுமென்ற நம்பிக்கை சனங்களிடையேஉண்டு; இதுமாத்திரமல்லாமல், அநுபானத்திற்குரிய சரக்குவகைகளும், மூலிகைவகைகளும் அந்த அந்த நாட்டிற் கிடைப்பனவாகும்; மேலும், பத்தியத்திற்காகியஉணவுப் பொருள்களையும் சுதேச மக்கள் தம் நாட்டிலேயே தேடி ஆக்கி உண்ணலாகும்; நோயாளிகளை வைத்துப் பரிகரிக்கும் ஆண்கள் பெண்களுட் பலர் ஆயுர்வேத வைத்தியத்தைப் பெறும் நோயாளிகளை, "நேர்ஸ்மார்" என்று சொல்லப்படும் மருத்துவப் பெண்களின்றித் தாமே பரிகரிக்கப் பழகியுள்ளார்கள்.

மேலே சொல்லப்பட்ட ஏதுக்களுடன் இங்குள்ள மக்கள் சுதேச வைத்தியத்தை விரும்புவதற்கு இன்னுமொரு பிரதான ஏது உண்டு; மலேரியா எனப்படும் காட்டுக்காய்ச்சல் நெருப்புக் காய்ச்சல், ஏனைய சுரங்களினுற் பீடிக்கப்பட்ட நோயாளிகள் மேலைத்தேச மருந்துகளை உட்கொண்டு தங்களைப் பீடித்த சுரநோய் நீங்கி, பத்தியமூமுண்டு, இரண்டொரு முறை ஸ்நாநமுஞ் செய்தபின், டக்ரர்மாரைப் பார்த்து "ஐயா, தலைக்குஏதும் மருத்தெண்ணெய் வைக்கவேண்டும், தலைவலி யதிகமாக விருக்கிறது" எனக் கேட்டால், டக்ரர்மார், "எங்களிடத்தில் எண்ணெய்ஏது? உங்கள் தமிழ் வைத்தியர்களிடத்திற் போய்க் கையைக்காட்டி ஏற்ற மருத்தெண்ணெய் ஏதும் வாங்கி வைத்து முழுகுங்கள்" என்று பதில் சொல்லுகிறார்கள்; இப்படிச் சொல்வதற்குக் காரணம் மேலைத்தேச வைத்தியத்தில் மருத்தெண்ணெயின் முறையில்லாமையேயாம்; இக்காரணத்தினுலும், ஊரிலுள்ள மக்கள் பெரும்பான்மையும் சுதேச வைத்தியரையே தேடிப்போய் வைத்தியஞ் செய்விக்கிறார்கள்;

சுதேச [illegible] மானித்தல் [illegible] திரம் நின்றுவிடவில்லை, பலவருடங்களாக மேலைத்தேச வைத்திய முறையையே பயின்று, டக்ரர்களாய் அரசினரிடத்துச் சேவை புரிந்தும், தம் பொறுப்பில் மேலைத்தேச வைத்தியசாலைகளைத் தாபித்து நடத்தியும் ஊரவர்களுக்கு அம்மேலைத்தேச முறை வைத்தியத்தையே செய்து வரும் டக்ரர்மார்தாமும், தமக்கேனும் தம்குடும்பத்தினர்க்கேனும் யாதாயினும் கடுநோயுற்ற விடத்துச் சுதேசவைத்தியர்களைக்கொண்டு வைத்தியஞ்செய்வித்தல்இந்நாட்டிலே சகசம்; காரணம் அவர்களுக்கும் ஆயுர்வேதவைத்திய முறையிலுள்ள நம்பிக்கையேயாம்.

## கிராம நிர்வாகம்

ஓர் நாட்டின் முன்னேற்றம், அதன் கிராமங்களிலேயே தங்கியுளளது. இக்கூற்று இந்தியா இலங்கையென்னும் இரு நாடுகளுக்கும் இன்னும் விசேஷமாகப் பொருந்தும். கிராம மக்கள் தற்காப்புடையவர்களாக, சுகதேகிகளாக, கல்வி கேள்விகளிற் சிறந்தவர்களாக விளங்க வேண்டும், இதற்கு இந்நாட்டுக் கிராமச்சங்கங்கள் முன்வரவேண்டும் கிராமச் சங்கங்கள் செவ்வனே தம் கடமையையைச் செய்ய வேண்டுமேயானல், அவற்றை நிர்வகிக்கும் தலைவர்கள் சிறந்தவர்களாயிருத்தல் வேண்டும், அத்தகைய தலைவரைத் தெரிந்தெடுக்கும் பொறுப்பு அங்கத்தவரைச் சார்ந்தது. எனவே, கிராம முன்னேற்றமும், அதன்மூலமாக இந்நாட்டின் சுபீட்சமும் கிராமச்சங்க அங்கத்தவர்கள் கையிலேயே பெரும்பான்மையும் தங்கியிருக்கிறது. இந்த உண்மையைக் கிராம மக்கள் உணரவேண்டும். அறிவு, அரசியல் ஞானம், பரோபகாரசிந்தை என்பன உள்ளவர்களையே அங்கத்தவராகக் கிராம மக்கள் தெரிதல் வேண்டும்- கௌரவத்துக்கும், அந்தஸ்துக்கும், அவாப்படுவோர்க்குக் கிராமச் சங்கங்களில் இடங்கொடுக்கவொண்ணது. உண்மைச் சேவையும், அச் சேவையைச் செய்யும் ஆற்றலும் அறிவும் உடையவர்களே அங்கு அங்கத்துவம் வகிப்பராஞல், எங்கள் நாடு கூடிய சீக்கி[illegible]நிலை அடையும்என்[illegible]மில்லை,

# இந்திய அரசியல்

### ஜின்னுவின் ஒப்பாரி

ஜின்னு இந்தியாவுக்கு வரும் வழியிலே எகிப்து தேசத்தில் தங்கி கெயிரோ நகரில், பத்திரிகைகளுக்கு ஓர் அறிக்கை கொடுத்தார். இந்தியாவிலே, மூஸல்மான்களுக்குப் பாகிஸ்தான் கிடைக்காவிட்டால, இந்திய முஸ்லீம்களுக்கு மாத்திரமன்றி, மத்திய கிழக்குப் பகுதியில் உள்ள முஸல்மான்கள் அனைவருக்குமே ஆபத்து ஏற்படும் என்று கூறினர். இந்தியாவிலே ஹிந்துராஜயம் ஏற்படுமானல், பிரிட்டிஷ ஏகாதிபத்தியத்தால் நாம் அடைந்த இடைஞ்சல்களை மீண்டும் அடையவேண்டி ஏற்படும், எனவே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இல்லாவிட்டாலும், நாங்கள் எண்ணெய்க் கொப்பரையிலிருந்து நெருப்பிற்குள் விழுந்தவராய் முடிவோம், எனவே, பாகிஸதான் விஷயத்தில் உலகிலே உள்ள சகல முஸ்லிம்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று கூறினர்,

### தவணையிடப்பட்டது

இப்போது கூடப்பட்டுள்ள அரசியல் நிர்மாணசபையின் நோக்கம் இந்தியாவைப் பரிபூரண சுதந்திரமுள்ள குடியரசாக்குவதே என்னும் ஓர் தீர்மானத்தைப் பண்டிதர் நேரு அரசியல் நிர்மாணசபையில் எடுத்தாண்டிருக்கிறார். தீர்மானமவில் எவரும் அதிற் குறைகூற முடியாது. என்றபோதிலும், முஸலிம்லீக் இப்போது இச்சபையில் இல்லாதபடியால் இத்தீர்மானம் விவாதிக்கப்படுவதை வருகிற மாதம் 20ந் திகதி வரைக்கும் தவணையிடவேண்டும் என ஸ்ரீஜயத் எம் ஆர் ஜெயகர் பிரேரித்தார், இவ்விஷயமாகப் டலத்த விவாதம் நிகழ்ந்தது ஆயினும், காங்கிரஸ வாதிகள் பண்டிதர் நேருவின் பிரேரணையைத் தவணையிடுதற்குச் சம்மதித்திருக்கின்றனர்.

### இனி நடப்பது

பிரிட்டிஷ் மந்திரிகள் கோஷ்டி தயாரித்த அரசியல் அறிக்கையைப்பற்றி இப்போது பிரிட்டிஷ் அரசாங்கம் அறிவித்துள்ள வியாக்கியானத்தை ஏற்றுக்கொள்ளுதாகக் காங்கிரஸ தீர்மானித்தால்தான், தானும் முஸலிம்லீக் கூட்டத்தைக்கூட்டி அரசியல் நிர்மாண சபையில் ஒத்துழைக்க நிச்சயம் செய்விக்கமுடியும் என்று ஜின்னு சென்ற ஞாயிற்றுக்கிழமை ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்.

### மீண்டுவிட்டார்

மகமத் அலி ஜின்னுவும், அவருடைய சகாவான லியாக்கத் அலிகானும் சென்றசனிக்கிழமையன்று கராச்சிக்கு மீண்டுவிட்டார்கள்; ஜின்னு சில நாட்களுக்குக் கரைச்சியிலேயே தங்குவார்; லியாகத் அலிகான் புது டேல்கிச்குப் போய்விட்டார்,

### எகிப்திய பத்திரிகையின் கண்டனம்

எசிப்திலே வாப்துகட்சியின் பத்திரிகையான 'அ கோத்லா'' ஜின்னு இந்திய சுதந்திரத்துக்கு முட்டுக்கட்டையாக நிற்பதைக் கண்டித்துப்பின் வருமாறு கூறுகிறது: "ஜின்னு தாம் ஓர் தேசீய பக்தர் என்றும், இஸ்லாமிய பக்தர் என்றும் சொல்லுகிறார்; ஆனல் இவருடைய தேசபக்தி, பிரிட்டிஷ்ஏகாதிபத்தியவாதிகளின் வாலில் தொங்குவதிலேயே இதுவரை தங்கியிருக்கிறது; இந்த விஷயத்தில் ஜின்னு சமயப் பிரச்சினைகளை அரசியலிற் புகுத்திஇந்தியாவின்சுதந்திரத்துக்குஇடையூறு கட்டையாக நிற்பதை இஸலாமியர் அனைவரும் கண்டிக்கவேண்டும்,"

### மத்திய கிழக்குக்கு ஆபத்தாம்

இந்தியாவிலே பாகிஸதான் ஏற்படாமல் ஹிந்துராஜயம் ஏற்படுமானல் மத்திய கிழக்கில் உள்ள முஸலிம் தேசங்களுக்கு ஆபத்து வந்துவிடும் என்று சென்றவாரம் எகிப்தில்நிகழ்ந்த ஓர் உபசாரக் கூட்டத்தில் மகமதலி ஜின்னு கூறினர்; இந்தியா எவர் அதிகாரத்தில் இருக்கிறதோ அவர் கையில் தான் மத்திய கிழக்கு முஸலிம் நாடுகளின் சுபீட்சமும் தங்கியிருக்கிறது என்று ஜின்னு கூறினர்; ஆகவே இந்தியாவில் பாகிஸதான் ஏற்படாவிட்டால் மத்திய கிழக்கு இஸலாமியராஜ்யம் ஹிந்துக்களுக்குஅடிமையாகவும் கூடும் என்று அவர் கூறினர்.

### கால்நடையில் யாத்திரை

இந்தியாவெங்கணும் கால்நடையிற் பிரயாணம் செய்து, ஹிந்து முஸலிம் ஒற்றுமையை வளர்க்க மகாத்மா காந்தி ஓர் திட்டம் வகுத்திருக்கிறார்; அவர் தனியாகவே அந்த யாத்திரையைச் செய்வாராம்;

## புகைரத ஸ்தானத்திற் பிரசவம்

சென்ற வெள்ளிக்கிழமையன்று அனுத்கமப் புகைரத ஸ்தானத்தில் கர்ப்பவதியான ஓர் பெண், பிரயாணச்சீட்டு வாங்கச் சென்றசமயத்தில் பிரசவ வேதனையுண்டாகிப் புகைரதஸ் தானத்திலேயே ஓர் சிசுவைப் பெற்றுள.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் சிங்கள ராஜ்யம்?

## சேனநாயக்காவின் தேச பக்தி

### இலங்கையில் சிங்களர் - தமிழர் தொடர்பு

தேசீய விஷயமாய் நடப்பது என்ன? | தமிழை அடக்கச் சதியாலோசனை

### சிங்களப் பத்திரிகையின் கூற்று

(நமது அரசியல் நிருபர் எழுதுகிறார்)

இந்த நாட்டில் உள்ள சகல சமூகத்தினரும் ஒத்துழைக்க வேண்டும்; ஆனால் அந்த ஒத்துழைப்பு நல்லெண்ணத்தையும் விசுவாசத்தையும் ஆதாரமாகக் கொண்டிருக்க வேண்டும். இலங்கையில் உள்ள பிரதான சமூகத்தினருள், சிங்களர் தமிழர் என்னும் இரு சாகியத்தாரும் அண்ணன் தம்பி போன்றவர்கள். இவர்களுக்கிடையே பல ஒற்றுமைகள் உண்டு சிங்களரிற் பெரும்பாலர் பௌத்த மதத்தினர். தமிழரிற் பெரும்பாலர் ஹிந்துக்கள். பௌத்த மத ஸ்தாபகரான புத்தபிரான் ஓர் சிறந்த ஹிந்துச் சீர்திருத்தவாதி. அவர் ஹிந்து மதத்தைப் புனிதப்படுத்த அவதாரம் செய்த மகான். இன்னும், சிங்களரும், தமிழரும் ஆதியில் இந்தியாவில் இருந்து வந்தவர்கள் என்றும், காலகதியில் இவர்களுக்கிடையே இரத்தக் கலப்பும் ஏற்பட்டிருக்கிறதென்றும் சிலர் கூறுவர். எது எப்படியிருந்தபோதிலும், இந்த இரு சமூகத்தினரும் அண்ணன் தம்பி போல இனியும் இந்த இலங்கையில் ஏன் வாழக்கூடாது?

○

**நல்லபுத்தி இல்லை**

அண்ணன் பலவானாக விருக்கிறான். அவனே தம்பியினை அணைக்க வேண்டும். இளையவன் மனத்திலேயுள்ள சந்தேகங்களை நிவிர்த்திசெய்ய வேண்டும். பரந்த மனப்பான்மை கொள்ளவேண்டும். போனற் போகிறது எப்படியுந் தம்பிதானே, அவனுக்கு வேண்டிய சலாக்கியங்களை நான் கொடுக்கவேண்டும் என்ற தியாக சிந்தை கொண்டு அண்ணன் செய்து வருவது உலகத்திற் சகஜம். இந்தக் குடும்ப முறையை அரசியல் விஷயத்திலும், இந்த இலங்கையிலே செய்து, தமிழ் மக்களது நல்லெண்ணத்தையும், விசுவாசத்தையும் பெற வேண்டியவர்கள் சிங்களர் என்பதை அவர்கள் தாமே ஒத்துக்கொள்வர். துர்அதிர்ஷ்டவசமாக இந்த நல்ல புத்தி இதுவரை சிங்களத் தலைவர்களுக்கு மருந்துக்காவது இல்லையென்பது வருத்தத்துக்கிடமான விஷயம். நாங்கள் ஜனத்தொகையில் மிகுந்தவர்கள்; நாங்களே பலவான்கள்: எனவே நீங்கள் நாம் சொல்லுகிறபடி கேட்கவேண்டும், இல்லையேல் அநர்த்தந்தான் என்று வெருட்டுகிறார்கள் சிங்களத் தலைவர்கள். அவர்களிற் சிரேட்டம் பெற்றவர் மிஸ்டர் சேனநாயக்கா. எங்கள் ஜனத்தலைவர்களிற் சிலரும், அவருடைய கட்டளைக்கிணங்கி, அவர் ஆக்கினைக்கு அடங்கி, மந்திரவாதியின் வசப்பட்ட பாம்பு போலவும், வேட்டைவாளியின் கைப்பட்ட பூச்சிபோலவும் மயங்கி நின்று தாளம் போடுகிறார்கள். இப்படி அவர்கள் செய்வது சுயநலத்தினால் என்று ஒருசிலரும், இயலாத்தன்மையினால் என்று இன்னோர் சிலரும், எப்படியாவது அண்டிக் கருமம் பெற என்று வேறு சிலரும் கூறிக்கொள்ளுகிறார்கள். இது எப்படியாயினுமாகுக.

○

**கோழைகள் செயல்**

சேனநாயக்காவைத் தலைவராகக் கொண்ட சிங்களத் தலைவர்களின் நோக்கம் என்ன? "இந்த நாடு எங்களுக்குத்தான் உரியது; எனவே இனி இதனை எங்களுக்காகவே கொள்ளவேண்டும். 'காலபேதத்தால் இதுகாறும் பல்வேறு சாதியார்க்கு அடிமைப்பட்டிருந்தோம்; சிறுபான்மையினரான தமிழர் தங்களுடைய முயற்சியாலும், தளரா ஊக்கத்தாலும், எங்களிலும் பார்க்கக் கல்வி, வர்த்தகம், அரசாங்க உத்தியோகம் என்பவற்றில் முன்னேறியதோடல்லாமல், அரசியல் விஷயமாகவும் எங்களிலும் பார்க்க முன்னேறிவிட்டார்கள். இதனை இனி விடக்கூடாது. நாமும் ஓர் சாதியாகத் தலைநிமிர்ந்து நிற்கவேண்டும். சிங்கள ஜாதியை உலகிற்குத் தெரியப்படுத்தவேண்டும்" என்று இன்னோரன்ன எண்ணங்கள் சிங்களத் தலைவர்க்கு இப்போது சிலகாலமாகத் தோன்றியிருக்கின்றது. இதனை நாங்கள் எல்லாரும் வரவேற்கத்தான் வேண்டும். அவர்களின் அபிமானத்தை நாம் பாராட்டத்தான் வேண்டும். ஆனால் அவர்களுடைய அபிமானமும், ஆர்வமும், மற்றும் சமூகத்தாரின் கலாசார, சமூக பொருளாதார விஷயங்களுக்கு இடையூறு விளைக்குமானால் அதனை உடனே கண்டித்து அப்படி அவர்கள் செய்யாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது, அவர்கள் செய்வதைப் பார்த்துக்கொண்டு, "எதனைச் செய்தாலும் செய்யட்டும், ஏதோ அவர்கள் மனமிரங்கித் தருவதைப் பெற்றுக் கொள்வோம்" என்று கூறும் நவீன தேசியவாதிகள் நம்மவருட் சிலர் உளர். இவர்கள் தேசீய வாதிகளும் அல்லர், வகுப்பு வாதிகளுமல்லர்; இவர்கள் கோழைகள்; முதுகெலும்பற்ற, ஆண்டன்மையற்ற பேடிகள் என்றே கூறவேண்டும்.

○

**சிங்களத் தலைவர்கள் நோக்கம்**

சிங்களத்தையும் தமிழையும் அரசாங்க பாஷைகளாக்க வேண்டும் என்று இப்போது அரசாங்கசபை தீர்மானித்துவிட்டது. ஆனால், இனி வரவிருக்கும் அரசாங்கம் இன்னுஞ் சிலகாலத்திலே தமிழை ஓர் பக்கத்தில் ஒதுக்கி வைத்துவிட்டுச் சிங்களமே இராச பாஷையாகவேண்டும் என்று விதித்தால் நாம் ஆச்சரியப்படுதற்கில்லை. இன்று ஐக்கிய தேசியக்கட்சியின் பிரபல ஸ்தர்களுள் ஒருவரா யுள்ளவரும், இலங்கைத் தேசிய (?) காங்கிரசின் காரியதரிசியுமான மிஸ்டர் ஜே. ஆர். ஜெயவர்த்தன இப்பாஷை விஷயமாக ஆரம்பத்திற் கொண்டுவந்த தீர்மானத்தில் சிங்களத்தையே இராஜபாஷையாக்க வேண்டுமெனக் குறிப்பிட்டிருந்தார். இதனை நாம் நல்லாகக் குறித்துக் கொள்ளல்வேண்டும். சிங்கள அரசியல்வாதிகளின் போக்கு எப்படியிருக்கிறதென்பதற்கு இது ஓர் உதாரணம். இப்பிரேரணை எடுத்தாளப்பட்டபோது, "சிங்களமும் தமிழும் இராஜ பாஷைகளாக விருக்கவேண்டும்" என மட்டக்களப்புப் பிரதிநிதி ஸ்ரீ வி. நல்லையா ஓர் திருத்தம் கொண்டுவந்தார். இந்தத் திருத்தத்தைச் சிங்களத் தலைவர்கள் அப்போது ஏற்றுக்கொண்டார்கள். இது ஓர் பெரிய இராஜதந்திரம், ஏற்றுக் கொள்ளா விட்டால், பிரிட்டிஷ் அரசாங்கம் ஆட்சேபிக்கும் என்ற ஓர் பயத்தின் காரணமாகவே சேனநாயகாக் கோஷ்டி அத்திருத்தப்பிரேரணையை அங்கீகரித்ததன்றி, தமிழர்பாற்கொண்ட அபிமானத்தால், அல்லது தமிழ்மொழிமீது கொண்டுள்ள அத்தியந்த ஆர்வத்தினால் அல்ல என்பதை நாம் ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுதல் வேண்டும். இப்படியாக அரசாங்கசபை இத்திருத்தத்தை ஏற்றுக்கொண்ட பின்னரும், மிஸ்டர் சேனநாயக்காவின் மகனாகிய டட்லி சேனநாயக்கா என்பவர் பாஷை விசாரணைச் சபை முன்னர்ச் சாட்சியம் கொடுத்தபோது, சிங்களம் தான் இராஜ பாஷையாக இருத்தல் வேண்டும் என்று கூறினார். இவ்விஷயமாக அவருடைய தந்தை சேனநாயக்கா சாட்சியம் கொடுக்கவில்லை. ஆனால் தன் மகன் கூறியதற்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்று எப்போதாவது கூறியுள்ளாரா? இதுவரை அவர் அப்படிச் செய்யாததிலிருந்து, டட்லி சேனநாயக்காவின் கூற்றை இவர் ஆமோதிக்கிறார் என்றே நாம் அநுமானிக்கவேண்டியிருக்கிறது.

○

**ஓரேபாஷைதான் லட்சியம்?**

அரசாங்கசபை இரு பாஷைகளையும் அரசாங்க பாஷைகளாக விதிக்க வேண்டும் என்று தீர்மானம் செய்திருப்பவும், இவ்விஷயமாக விசாரணை புரிந்த சபையினர், சாட்சியம் கொடுக்க விரும்புவோருக்கு விடுத்த கேள்விப் பத்திரத்திலே இலங்கையின் சட்டப் பிரமாணங்களை ஓரே பாஷையில் தான் ஆக்குதல் உமக்கு விருப்பமா? அப்படியானால் உமது அபிப்பிராயம் என்ன?" என்னும் கருத்துப்படக் கேட்டிருக்கிறார்கள். இப்படிக் கேட்டதற்குக் காரணம் என்ன? இவ்வாறு கேட்கவேண்டும் என்று அரசாங்கசபைத் தீர்மானத்தில் எப்பகுதியிலேனும் சொல்லப்பட்டிருக்கிறதா? பாஷை விசாரணைச் சபையினர் யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ் செய்தபோது இப்படியாகச் சாட்சிகளுக்கு விடுக்கப்பட்ட வினாப்பத்திரத்தைப்பற்றிய ஓர் ஆட்சேபனையை, நியாயவாதிகள் என். தம்பித்துரை, என். என். இராஜதுரை ஆகியோர் கிளப்பினர். இந்த இரு நியாயவாதிகளும் குறித்த விசாரணைச் சபை முன்னர்ச் சாட்சியங் கொடுத்தபோது, "ஒரு பாஷையில் தான் சட்டப்பிரமாணங்களை அமைக்க வேண்டும்" என்ற பிரச்சினையை யார் கிளப்பினது என்று விசாரணைச் சபைத் தலைவரிடம் நேரடியான ஓர் கேள்வியைக் கேட்டனர். பாவம், தலைவர் மவுனம் சாதித்தார்; அங்கத்தவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தனர். கல்வி மந்திரி கன்னங்கரா, அது யாரோ ஒருவர் கொடுத்தசாட்சியத்தில் வந்தஆலோசனையாயிருக்கலாம்" என்றுவிஷயத்தைமழுப்பிவிட்டார்.

○

**"டெயிலி நியூஸ்" கூற்று**

பாஷை விசாரணைச் சபை தனது அறிக்கையை வெளியிட்டு விட்டது. இன்னும் 10 ஆண்டு காலத்தில் சிங்களமும் தமிழும் அரசாங்க பாஷைகளாகவேண்டு மென்பது இச்சபை

தொடர்ச்சி 5-ம் பக்கம்

# நாவலர் ஞாபகம்

## உருவப்படத் திறப்பு விழா

(நமது நிருபர்)

'நாவலனரப்போலச் சிவசங்கர பண்டிதரும் அரும்பெரும் தொண்டுகளைச் செய்தார். நாவலர் திருநாளை நீங்கள் கொண்டாடுவதுபோல சிவசங்கரபண்டிதர் அவர்களுடைய திருநாளையும் நீங்கள் தவறாது கொண்டாடவேண்டும். சிவசங்கரபண்டிதர் சேவைசெய்த இக்கிராமத்தில் அவருடைய ஞாபகார்த்தமாக ஓர் ஸ்தாபனத்தை நீங்கள் அமைக்கத் தவறக் கூடாது, அப்படி அமைப்பது நீர்வேலி வாசிகளாகிய உங்களுக்குப் பெருமையேயல்லாமல் சிறுமையல்ல. சிவசங்கர பண்டிதரும் நாவலரும் அத்தியந்த நண்பர்கள், ஆகையினால் தான்போலும் வேறு எந்த இடங்களிலும் பார்க்க நீங்கள் நாவலர் திருநாளை ஓர் விசேட முறையிற் கொண்டாடுகிறீர்கள். சிவசங்கர பண்டிதருடைய கிராமத்திலே நாவலர் அவர்களது இந்த அழகிய திருவுருவத்தைத் திறந்துவைக்கும் பாக்கியத்தை எனக்குத் தந்திருக்கிறீர்கள் மேலும் உங்கள் அபிமானமும் அன்பும் வளர்ந்து சிவசங்கர பண்டிதர் ஞாபகார்த்தமாக ஓர் ஸ்தாபனம் தோன்றவேண்டும்.''

சென்ற சனிக்கிழமை (14-12-45) மாலை 4மணியளவில் நீர்வேலிச் சைவ இளைஞர் சங்க ஆதரவில் நீர்வேலிப் பொதுசன நெசவுத் தொழிற்சாலை மண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் திருநாள் அதி விசேடமாகக் கொண்டாடப்பட்டது. அன்று இங்கிருந்து வரைந்து கொண்டு வரப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களது திருவுருவத்தை திறந்து வைக்கும்போது இந்துசாதனப் பத்திரிகாசிரியர் திரு. ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை அவர்கள்மேற்கண்டவாறு கூறினர்.

கூட்டத்துக்கு இளைஞர்களும் அறிஞர்களும் வந்திருந்தார்கள். இந்துசாதனப் பத்திரிகாசிரியர் திரு. ம. வே, திருஞானசம்பந்தப்பிள்ளை அவர்களும் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. த முத்துச்சுவாமிப்பிள்ளையவர்களும் பொதுமக்கள் சார்பாக மலர் மாலையிட்டு வரவேற்கப்பட்டனர். தேவார பாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமானது. நாவலர் அவர்களது படத்தைத் திறந்து வைக்குமாறு பொதுமக்கள் சார்பாக திரு நீ. சி. முருகேசு ஆசிரியர் அவர்கள் திரு. ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை யவர்களை வேண்டிக்கொண்டார்.

பத்திராதிபர் அவர்கள படத்தைத் திறந்து வைத்தார்கள், பின்னர் பிரார்த்தனை நடைபெற்றது. யோகி ஸ்ரீ சுத்தானந்தபாரதியா ரவர்கள் நாவலர் பெருமான்மீது பாடிய பாட்டுக்கள் படிக்கப்பட்டன. சபைத்தலைவர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை அவர்கள் பேசியதின் சுருக்கமாவது:

"ஒல்லாந்தர் முதலியவர்களால் சைவம் ஆபத்து அடைந்த நேரத்தில் நாவலர் பெருமான் அவதரித்து அரிய பெரிய சேவைசெய்தார். இலகுவான நடையில் வசனங்களை ஆக்கித் தந்தார். பலபிரசங்கங்கள் செய்

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு

காலஞ்சென்ற கரம்பன் அந்தோனிப் பிள்ளை பெண் செபமாலை மரியையின் ஆதனம்.

உருமைத் தத்துவ வழக்கு இல. 441

காலஞ்சென்ற கரம்பன் அந்தோனிப் பிள்ளை மரியாம்பிள்ளை தத்துவகாரன்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 441-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளையின்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணிகளை 1947-ம் ஆண்டு தைமாதம் 8-ம் திகதி புதன்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணிகளின் விபரம்

1 ஊர்காவற்றுறை கோயிற்பற்று கரம்பன் இறை தாளிக்காடு நெற்பரப்பு 25 எல்லை கிழக்கு வயித்தியாம்பிள்ளை பெண் டேயிசி வடக்கு தம்பிநாயகம் பெண் லில்லியும் போல்பிள்ளையும் பங்காளரும் மேற்கு வாய்க்கால் தெற்கு சவிரிமுத்து பெண் மேரிப்பிள்ளை இதடங்கலிற் சொரியலாய் அரைவாசி.

2 கரம்பன் இறை உயிலடியிற்புலம் நெற்பரப்பு 25-ம் கிணறும் பனை வடலிகளும் தென்னைகளும் எல்லை கிழக்கு அவிரும்பிள்ளை கைம்பெண் மரியைப் பிள்ளை வடக்கு யோசேப்பு பெண் பிரகாசிக்கும் இலாசப்பிள்ளை பெண் அன்னம்மா மேற்கு ஒழுங்கை தெற்கு இராமலிங்கம் பெண் அன்னப்பிள்ளையின் உருமைக்காறர் இந்தக் காணிக்கூடாகப் போகும் றோட்டுக்கு எடுபட்ட நிலம் பிற நீங்கலாக மிதுதி யடங்கலிற் சொரியலாய் ஐந்தில் இரண்டு பங்கு.

3 கரம்பன் இறை வட்டுவில் நெற்பரப்பு $15\frac{5}{8}$ எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கும் மேற்கும் அந்தோனிப்பிள்ளை மரியாம்பிள்ளை தெற்கு முருகமூர்த்தி கோயிலாதனம் இதடங்கலிற் சொரியலாய் அரைவாசி.

4 கரம்பன் இறை உயிலடியில் புலம் நெற்பரப்பு $14\frac{3}{4}$- கிணறும் பனை வடலிகளும் தென்னைகளும் எல்லை கிழக்கு முருகமூர்த்திகோயி லாதனமும் அந்தோனிப்பிள்ளை மரியாம்பிள்ளையி னுதனம் வடக்கு அந்தோனிப்பிள்ளை மரியாம்பிள்ளையும் சந்தியாப்பிள்ளை தம்பிஐயாவும் வயித்தியாம்பிள்ளை ஆசைமுத்துவும் மேற்கு, பொன்னம்பலம் பெண் சிவகாமிப்பிள்ளையும் திருநாவுக்கரசு பெண் செல்லாச்சிப்பிள்ளையும் அவிரும்பிள்ளை கைம்பெண் மரியைப்பிள்ளையும் இதடங்கலிற் சொரியலாய் அரைவாசி.

ஆ. ச. கந்தையா,
A. S. Kandiah,
கொமமிஷனர்

காரைநகர்,
6-12-46
Mis 277 24—12—46

## தேவை

தென்னந்தோட்டக் கண்டக்டர்மார் ஐவர் தேவை; அநுபவத்துக்குத் தக்கவாறு மாத வேதனம் 60 ரூபா தொடக்கம் 80 ரூபாவரை உதவப்படும் "ஸ்லீப் பர்க்கட்டை" வேலைக்கு சுறுசுறுப்பான திறமை வாய்ந்த 8 வாலிப விகிதர்மாரும் தேவை. வேதனம் மாதந்தோறும் 30 ரூபாவும் உணவும். இவர்களைவிட லீனியர் பரீட்சையிற் சித்தி எய்திய ரைப் அடிக்கக்கூடிய ஒருவரும் தேவை அவர்க்கு வேதனம் மாதம் 40 ரூபாவும் உணவும்.

டிசெம்பர்௴ 18-ம் திகதிக்கும் 31-ம் திகதிக்குமிடையில் சித்தங்கேணியிலும், அதன்பின் மட்டக்களப்பிலும்தாரதாப்பத்திரங்களுடன் பின் வருவோரைக் கண்டு ஒழுங்குகள் செய்க.

முகாந்திரம். S. குமாரசுவாமி
சித்தங்கேணி, வட்டுக்கோட்டை.

(Mis 275. 17, 20, 24 27-12-46)

## யுத்தச் செலவு

1939-ம் ஆண்டு தொடக்கம் 1946-ம் ஆண்டுவரை நடந்த மகா யுத்தத்தில் இங்கிலாந்துக்கு யுத்தச் செலவாக 2100 கோடி தங்கப்பவுண் செலவாணது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 2597

யாழ்ப்பாணம் கரையூர் அகஸ்தீன் யோசேப்பு. வழக்காளி

எதிராக

யாழ்ப்பாணம் கரையூர் வயித்தி சைம் பெண் அனந்தாசி (கரையூர் காலஞ்சென்ற கவுரியல் சந்தியாகோவினதும் பெண் அன்னம்மாவினதும் ஆஸ்திக்குப் பிரதி காரியஸ்தராகவும்) எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் 2597-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1947-ம் ஆண்டு ஜனவரி (தை) மாதம் 13-ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:—முதல்வட்டி ரூபா 580-50-ம், இதில் ரூபா 300 க்கு 6—3—46-ந் திகதி தொடக்கம் 13-8-46 திகதி வரைக்கும் 100க்கு 12 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100க்கு 5 வீத வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 151—77 சதம்.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று கரையூரிறை "பறையன் மணற்காடு" பேட்செஸ் $15\frac{3}{4}$ம் வீடும் கிணறும் செய்பயிர்களும், எல்லை கிழக்கும் வடக்கும் மேற்கும் ஒழுங்கை தெற்கு றோட்டு. இவ்வெல்லைக்குட்பட்டவைகளிற் சொரியலாய் எட்டில் மூன்று பங்கும் ($\frac{3}{8}$ம்) அதற்துரியவைகளும் முற்பதிவு D 123/211.

சின்னத்தம்பி சங்காப்பிள்ளை,
Commissioner & Licensed Auctioneer.

தெல்லிப்பழை,
7-12-46.
Mis 278 24—12—46.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டேவிட்றோட் (1) மாட்டின் யேமிஸ் இராசையா, (காலஞ்சென்ற பொன்னு லேசாவின் ஆஸ்திக்கு தத்துவ காரன் என்ற முறையில் வழக்காளி)

2 எஸ். மி சவரிமுத்து கைம்பெண் மேரி கங்கரத்தினம் வழக்காளிகள்.

எதிராக

கரையூர் 1 பொன்னர் யோசேப் அல்பேட். 2 அக்கெஸ்தீன் கிறிஸ்தோபர் 3 பெண் பூரணம் தானுகவும், 3-ம் எதிராளி காலம் சென்ற பொன்னர் வயிரமுத்துவின் ஆஸ்திக்கு பிரதிகாரியஸ்தராகவும். எதிராளிகள்

இல. 2860

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் 2860-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1947-ம் ஆண்டு ஜனவரி (தை) மாதம் 18 ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை:—முதல் வட்டி ரூபா 1038 ம் இதற்கு 8—7—46-ந் திகதி தொடக்கம் இறுபடும் வரைக்கும் 100க்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 281-$42\frac{1}{2}$ சதமும்

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று கரையூரிறை "மருதப்புல்தறை" குளி $8\frac{15}{16}$-ம் புதிதாகக் கட்டின வீடும், குசினியும், கிணறும், மற்றும் பயிர்களும், எல்லை கிழக்கு றெயில் றோட்டு வடக்கு முடிக்குரிய ஆதனம். மேற்கு பொன்னர் முருகேசுவின ஆதனம், தெற்கு 2 ம் 3-ம் எதிராளிகளின் ஆதனம் இதடங்கலும், முற்பதிவு D 100 3.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை,
Commissioner & Licensed Auctioneer,

தெல்லிப்பழை,
14-12-46.
Mis 279 24—12—46.

## நாவலர் ஞாபகம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தார். பிற மதத்தவர்கள் தமது சமயத்தை வளர்க்கக் கைக்கொள்ளும் முறைகளை நாவலர் கைக்கொண்டார் அதன்படி பலவிதமாகப் போதனை செய்தார். துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டார். அச்சுக்கூடங்கள் நிறுவினர். பாடசாலைகள் ஸ்தாபித்தார். புத்தகங்களை வெளியிட்டார். செய்யுள்களை வசன நடையில் வெளியிட்டார். நாவலரைப்போல சிவசங்கர பண்டிதரும் அரும்பெரும் தொண்டுகளைச்செய்தார். சிவசங்கரபண்டிதருடையகிராமத்திலே நாவலர் அவர்களதுஇந்தஅழகிய திருவுருவத்தைத் திறந்துவைக்கும் பாக்கியத்தை எனக்குத் தந்திருக்கிறீர்கள். மேலும் மேலும் உங்கள் அபிமானமும் அன்பும் வளர்ந்து சிவசங்கர பண்டிதரது ஞாபகார்த்தமாக ஓர் ஸ்தாபனம் தோன்றவேண்டும், இப்படியாகக் கொண்டாடுவதினுல் மட்டும் நின்றுவிடாதீர்கள். நாவலரைப் பின்பற்றுங்கள். நாவலரைச் சிலர் பிடிவாதச் சைவன் என்றும் கூறுகிறுர்கள். அது தவறு என்று அவருடைய நடைமுறைகளைக் கவனித்தால் எளிதில் விளங்கும். அவரவர் சமயத்தை முறைப்படி அநுசரிப்பதை நாவலர் வரவேற்கிறுர். போலிகளையும் சந்தர்ப்ப வாதிகளையுமே கண்டிக்கிறுர். அவர் நமக்குச்செய்த அரும் தொண்டுகளுக்காகவும் சேவைகளுக்காகவும் நாம் நன்றியறிதல் உள்ளவர்களாக இருக்கவேண்டும். நாம் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டுமானுல் அவரைப் பின்பற்றவேண்டும்."

### நாவலருடைய முன்மாதிரிகள்

அடுத்தபடியாக முடிக்குரிய வழக்கறிஞர் திரு. த. முத்துச்சுவாமிப்பிள்ளை அவர்கள் கூறியதாவது:"நாவலர் அவர்கள் பார்சிவல் பாதிரியாரிடம் படித்தார்கள். நாவலர் பாதிரியாரிடம் ஆங்கிலம் கற்றுர்; பாதிரியார் நாவலரிடம் தமிழ் கற்றுர் இருவரும் நல்ல சிநேகிதர்கள், பாதிரியாருக்காக அவரது வேண்டுகோளின்படி பைபிளை சுத்தமாக மொழிபெயர்த்து உலகில் பாதிரியாருடைய பெயரை நாவலர் நிலைநாட்டினுர்., நாவலர் தோன்றுவிட்டால் நாமெல்லோரும் இன்று கிறீஸ்தவர்களே, நாவலர் ஓர் தீர்க்கதரிசி. நேர்மையான குணமுடையவர். குற்றங்களைச் சகிக்க மாட்டார். சமையோசித புத்தியுள்ளவர். பின்வாங்காதவர். எமக்கு நல்வழிகளைக் காட்டியுள்ளார். நாம் அவற்றைப் பின்பற்றவேண்டும். நாவலர் அவர்களைப்பற்றி எவ்வளவோ சரித்திரங்கள் உண்டு. அவற்றை நீங்கள் அறிந்திருப்பீர்கள்."

### நாவலரைப் பின்பற்றுவதெப்படி?

அடுத்தபடியாக மேற்படி சங்கத் தலைவர் திரு. ௬. சிற்சபேசன் அவர்கள் கூறியதாவது: "நாங்கள் இவ்வித கூட்டங்களோடுநின்றுவிடக்கூடாது. பெரியோர்களது புத்திமதிகளைக் கேட்கவேண்டும். பின்பற்ற வேண்டும். நன்ருகப் படிக்கவேண்டும். உண்மைகளை உணரவேண்டும், நமது சமயத்தைச் சரியாக அநுஷ்டிக்கவேண்டும். புராணங்கள் படிக்கவேண்டும் மேல்நாட்டுப் பூச்சு மினுக்குகளுக்கு ஏமாறக்கூடாது.

### நல்லூரில் புலி—நீர்வேலியில் சிங்கம்

அடுத்தபடியாக திரு. நீ. சி முருகேசு ஆசிரியர் அவர்கள் கூறியதாவது: "இன்று நமது கிராமம் கல்வி நிலையிலும் சமய அறிவிலும் மிகவும் கீழ்நிலையில் இருக்கிறது. இவற்றைத் திருத்துவதற்குத் தக்க பாடசாலைகள் இல்லை. நல்ல நிர்வாகம் இல்லை நம்முடைய மூன்றும் வகுப்புப் படிக்கிற பிள்ளைக்கு ஓர் சைவ வினுவிடை வாங்கிக் கொடுத்தேன். அப்பிள்ளை, "இந்தப் புத்தகம் அங்கு படிப்பிக்கிறதில்லை, எனக்கு வேண்டாம்" என்று கூறியது. இதற்கு நாம் என்செய்யலாம். சைவப் பாடசாலை யென்று பெயர் இருந்து பலன் என்ன? நல்லூரில் புலி-நீர்வேலியில் சிங்கம் என்று முற்காலத்தில்கூறுவார்கள். புலி தமிழுக்குப்புத்துயிரளித்தார் நாவலர். சிங்கம் கிருஸ்துக்குப் புத்துயிரளித்தவர் சிவ சங்கரபண்டிதர். இவர்கள் இருவரையும் பற்றி இலங்கையில் மட்டுமல்ல, இந்தியாவில் இப்பொழுதும் விசாரித்தால்தெரியும். இப் புலியும் சிங்கமும் சேர்ந்து இந்தியாவில் பெரிய புரட்சியைச்செய்தன. பெரியவெற்றி கிடைத்தது. அந்த வெற்றி இனிமேலும் தொனிக்க வேண்டாமா? புலியும் சிங்கமும் செய்த தொண்டை மறக்கலாமா? இக்கனவுகளை நனவாக்குவோம்.

பின்னர் திரு. பூ. சி. நடராசா அவர்கள் நன்றி கூறினர். நாவலர் பெருமானது திருவுருவப் படத்தை எழுதுவித்தும் வேண்டிய உதவிகளையுஞ்செய்ததிருமயிலைஸ்ரீசே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்களுக்கும நன்றியறிதல் தெரிவிக்கப்பட்டபின் ஈற்றில் தேவாரபாராயணத்துடன் கூட்டம் 6 மணிக்கு முடிந்தது. பின் அடியார்க்குப் பிரசாதம்வழங்கப்பட்டது.

## உணவு நிலை

### சற்றுத் திருப்தியானது

இலங்கையிலே உபஉணவுப் பொருள்களாகிய கடலை, உழுந்து, பயறு என்பன இப்போது போதிய அளவுக்கு இருக்கின்றன என்று ஓர் அறிக்கை கூறுகிறது.

பருப்பு வகைகள் கிழக்கு ஆபிரிக்கா, மத்திய கிழக்குப்பகுதி முதலாம் இடங்களிலிருந்து ஒழுங்காக வருகின்றன.

அமெரிக்காவிலிருந்து இன்னும் சில தினங்களில் 8000 தொன் சவ்வரிசி வரவிருக்கிறது.

டிசெம்பர் மாதம் முடிவதற்கிடையில் 17,700 தொன் அரிசி அமெரிக்காவிலிருந்து இறக்குமதியாகும். இதனைவிட ஜனவரி முதற்பகுதியில் 17000 தொன் மாவும் இறக்குமதியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஹாலந்திலிருந்து உருளைக்கிழங்கு பெருந்தொகையில் இப்போது இறக்குமதியாகிறது. இந்தியாவிலிருந்து இப்போது மிளகாய் வரத்துக் குறைந்து விட்டபோதிலும், சங்கக்கடைகளுக்குப் போதிய அளவு ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கிறது.

நேற்றுத் தொடக்கம் கொடுக்கப்படும் மா விநியோக அளவு இரண்டு கிழமைக்குத்தான் என முன்னர் அறிவிக்கப்பட்டது. ஆனுல், இப்போதிருக்கும் நிலைமையை அவதானிக்குமளவில், இந்த அளவு, இரண்டு கிழமைக்கு மாத்திரமல்ல கூடிய காலத்திற்கு நீடிக்கப்படலாம் என்பதற்கான அறிகுறிகள் இருக்கின்றன. ஆனுல் அரிசி ஒன்றரைப் படியாக விநியோகிக்கப்பட்டால் மாவின் அளவைக் குறைக்கவும் கூடும்.

### புது முயற்சி

கைத்தொழில் ஆராய்ச்சி நிர்மாணம், விருத்தி என்பவற்றுக்காகப் புதிய ஓர் பகுதியை நிறுவ அரசாங்கம் இப்போது நிச்சயித்திருக்கிறது. இதற்கு 89,968ரூபா செலவு ஏற்படுமாம். இப்பகுதித் தலைவராகவுள்ளவர்க்கு ஆண்டுதோறும் 2000 பவுண் வேதனம் உதவப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவபரிபாலனசபை ஆச்சிரம நிதி

## பணம் உதவியோர் விபரம்

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| ஸ்ரீமான்கள் | முன் கணக்குப்படி | 865 | 00 |
| முதலியார் S. K அப்பாத்துரை | | 10 | 00 |
| வே. தா. சி. சிவகுருநாதர் | | 50 | 00 |
| வை. சி. சி. கு. | (முதற்பகுதி) | 50 | 00 |
| K. ஆறுமுகம் | | 5 | 00 |
| C. முத்துவேலு, J. P. | | 20 | 00 |
| இ. சி. இரகுநாதையர் | | 25 | 00 |
| K. சின்னத்துரை | | 5 | 00 |
| வே. மாணிக்கவாசகர் | (முதற் பகுதி) | 10 | 00 |
| P. தம்பி, பிரம்படி, கோக்குவில் | | 10 | 00 |
| K, கனகரத்தினம், கோலாலம்பூர் | | 15 | 00 |
| A S. கந்தையா, திருநெல்வேலி கிழக்கு, | | 10 | 00 |
| A. N, கந்தையா | | 50 | 00 |
| ஸ்ரீமதி சி விசாலாட்சி | (இரண்டாம் பகுதி) | 25 | 00 |
| | ஆக | 1150 | 00 |

# கெட்ட பொருள்கள்

## சங்கக் கடைகளில் திணிப்பது யார்?

ஐக்கிய சங்கக் கடைகளுக்கு உணவுப் பொருள்கள் முதலியனவற்றை விநியோகிப்பதற்கு ஐக்கிய மொத்த வியாபாரப்பகுதி என ஓர் பகுதியை அரசாங்கத்தார் வைத்திருக்கிறார்கள். இப்பகுதிக்கென ஆண்டுதோறும் லட்சக்கணக்கான ரூபாய் செலவாகின்றது. இப்போது இந்த மொத்த வியாபாரப் பகுதியினர் ஓர் புது முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்களாம்; அதாவது, இலங்கையில் வேற்றுநாடுகளிலிருந்து பொருள்கள் இறக்குமதியாக்கும் வர்த்தகரிடம் உள்ள வேண்டாப் பொருள்களை வாங்கி, தம்கீழ் உள்ள சங்கக்கடைகளுக்குத் திணிப்பது.

கொழும்பிலுள்ள சில இறக்குமதியாளரிடம், இப்படியாகப் பலவித சரக்குகள் இப்போது சிலகாலத்துக்கு முன் வந்தன. புசர்மா, ஓடிக்கோலன் போன்ற சில பொருள்களை அவர்கள் விற்க வழியில்லாது நின்ற சமயத்தில், இந்த மொத்த வியாபாரப்பகுதியார் விலைகொடுத்து வாங்கிவிட்டார்கள். ஆனால் அப்பொருள்களை வாங்கிய விலையிலும் பார்க்கக் குறைத்தே இப்போது விற்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஓர்பெருந்தொகையான சீனவெடிகள் இப்போது சிலகாலத்துக்குமுன் வந்தன. இவற்றையும் மொத்த வியாபாரிகளிடம் வாங்கி, இப்போது முதலுக்கும் விற்க வகையறியாது கஷ்டப்படுகிறார்கள். இந்த விதமாகவே, கொஞ்சக் காலத்துக்கு முன், இப்பகுதியினர் வாங்கிய "எலெக்ரிக் டோச் பல்பு"களும் நட்டத்துக்கு விற்கப்பட்டன.

தனி வர்த்தகர்களிடம் உள்ள வேண்டாப் பொருள்களையும், குணம் குறைந்த பொருள்களையும் வாங்கிப் பின் சங்கக்கடைகளுக்குத் திணிக்க இந்த மொத்த வியாபார நிலையத்துக்கு அதிகாரம் கொடுத்தது யார்? இப்படியான முறைகளினால் ஏற்படும் நட்டத்துக்குப் பொறுப்பாளி யார்?

குறித்த மொத்த வியாபார நிலையத்திலுள்ள சில அதிகாரிகளே தனி வர்த்தகரோடு சேர்ந்து, இந்த அநியாயத்தைச் செய்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. இது உண்மையானால், ஐக்கிய சங்கக் கடைகளின் எதிர்காலம் நல்லாயில்லை என்பது நிச்சயம். இப்போதே தனிப்பட்ட வர்த்தகர்களின் போட்டி மெல்ல மெல்லவாக உருவாகிறது. அழுகிய உழுத்த பொருள்கள்தான் சங்கக் கடைகளிற் கிடைக்கின்றன என்று ஊரவர் முறையிடத் தொடங்கி விட்டார்கள், கேவலம் சுயநலமிகளான அதிகாரிகளை மொத்த வர்த்தக நிலையத்திலிருந்து நீக்கவேண்டும். நல்ல பொருள்களையே சங்கக்கடைகளுக்கு உதவ வழிசெய்யவேண்டும். இல்லையேல் கூடிய சீக்கிரத்தில் சங்கக் கடைகளை மூடிவிடவேண்டியது தான்!

### அடுத்த பொலிஸ் தலைவர்

இற்றைக்கு ஒரு மாதத்துக்குமுன் இப்போதுள்ள பொலிஸ் அதிகாரியான மிஸ்ரர் R. R. M. பேக்கன் என்பவர் நீக்கப்படுவார் என்றும் அவரிடத்துக்காக ஓர் இலங்கையரை உள்நாட்டு நிருவாக சபை சிபாரிசு செய்யும் என்னும் செய்தி வெளிவந்தபோது, இப்படியாகச் சிபாரிசு செய்யப்படுபவர் மத்தியமாகாணத் தலைவர் மிஸ்ரர் அலுவிகாரையாகத்தான் இருக்கும் என்று இந்துசாதனம் முதன்முதலாக அறிவித்தது.

இப்பத்திரிகையின் கூற்று இப்போது உண்மையாகிவிட்டது. இற்றைக்குச் சின்னாட்களுக்கு முன் நிகழ்ந்த உள்நாட்டு நிருவாகசபையிலே இவ்விஷயம் விவாதிக்கப்பட்டது. மிஸ்ரர். ஏ. ஜீ. றணசிங்க, மிஸ்ரர் ஆர். அலுவிகாரை என்னும் இருவரது பெயரும் மேற்படி நிருவாக சபையில் சிந்திக்கப்பட்டன. ஆனால் அப்போது எவ்விதமான முடிவும் செய்யப்படவில்லை.

இப்போது மிஸ்ரர் அலுவிகாரை அவர்களையே உள்நாட்டு நிருவாக சபை சிபாரிசு செய்துவிட்டது அதனுடைய சிபார்சினைத் தேசாதிபதியும் அங்கீகரித்து விட்டார். அடுத்த மாதம் 5-ந் திகதி தொடக்கமாக மிஸ்ரர் அலுவிகாரை கடமை ஏற்பார் என்று தெரிகிறது. மிஸ்ரர் அலுவிகாரை இந்த வடமாகாணப் பொலிஸ் தலைவராகிய மிஸ்ரர் ஓஸ்மன் டீ. சில்வா அவர்களுடைய மாதுலராவர் என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாம்

### ஆயுர்வேத விசாரணைச் சங்கம்

இச்சங்கத்தினர் நேற்றும் இன்றும் யாழ்ப்பாணத்தில் விசாரணை நடத்தி வருவாராயினர்; இங்குள்ள ஆயுர்வேத சித்த வைத்தியர்கள் சிலரும், டக்ரர்மார் சிலரும், அநுபவமுள்ள ஊரவர்சிலரும் தத்தம் அபிப்பிராயங்களை மேற்படி விசாரணைச் சபையினர்க்குக் கூறலாயினரெனவும், இன்றோடு இங்கே இவர்களுடைய விசாரணை முற்றுப்பெறுமெனவும் அறியலானோம்.

# கந்தபுராணக் கவி நுட்பம்

## துவணவர் வரு படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க்கேட்டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.

பருப்ப தக்கோடி புரைநவ சத்திகள் பரமன்
றிருப்ப தத்திடை வணங்கின் றவனிடைச் சிந்தை
விருப்பம் வைத்தலு முனிவர்த மகளிர்போல் விரைவிற்
கருப்ப முற்றனர் யாவது முமையவள் கண்டாள்.

பருவதவர்த்தனியா ராகிய உமாதேவியாரை நிகர்த்த நவசத்திமாரும், கைலாசபதியி னுடைய சிறந்த திருவடிகளிற் பஞ்சாங்கமாக வீழ்ந்து வணங்கி யெழுந்து விநயமாகநின்று, அப்பெருமானிடத்தில் தம் முள்ளத்திற் பிறந்ததாகிய பத்தியைச் செலுத்தியபோது, தாருகாவனத்து முனிவர் பத்தினியர் கருப்பமடைந்தவாறு இவர்களும் உடனே கருப்பமடைந்தனர், இந் நிகழ்ச்சிகளை யெல்லாம் உமாதேவியார் பார்த்தனர் என்பது கருத்து.

இந் நவசத்திகளும் உமாதேவியாரின் பரிக்கிரக சத்திகளாதலிற் "பருப்பதக்கோடி புரை நவசத்திக"ளென்றார், பரமசிவன் பிக்ஷாடன மூர்த்தங்கொண்டு தாருகா வனத்திற் கெழுந்தருளியபோது, அவ்வனத்துள்ள முனிவர் பத்தினிமார் பெருமான்மீது இச்சை கொண்டமையையும், அது காரணமாக அவர்கள் உடனே தனித்தனி கருப்பமுற்ற வரலாற்றையும் மேலே தக்ககாண்டத்திற் காண்க. தம் திருவடிச் சிலம்பினின்றுந் தெறித்த நவமணிகளிடத்து நவசத்திகளின் வடிவம் அமைந்தமையையும், அவ்வடிவங்களை இறைவன் "வம்மின்" என விளிக்க அவை வந்து சத்திகளாகி இறைவனை வணங்கியமையையும் வணங்கும் போது பெருமானிடத்தில் இச்சை வைத்தமையையும், பெருமானது திருவருள் நோக்கால் அச்சத்திகள் கருப்பமுற்றமையையு மாகிய எல்லாவற்றையும் இறைவருடைய இடப்பாகத் தமர்ந்த ஈசுவரி கண்டா ளென்பார் "யாவது முமையவள் கண்டாள்" என்றார். (9)

முனம்பு ரிந்துல களித்தவ ளனையர்பான் முதிருஞ்
சினம்பு ரிந்திவ ணமக்சமா ருகிய திறத்தாற்
கனம்பு ரிந்தவிக் கருப்பமோ டிருத்திர்பல் காலம்
இனம்பு ரிந்தநீர் யாவரு மென்றுகு ளிசைத்தாள்.

ஆதிதொட்டுத் தமது இச்சையினால் உலகம் முழுவதையும் காத்தருளும் உமாதேவியார், அதிகப்படுகின்ற சீற்றங்கொண்டு, (இச்சத்திகளை நோக்கி) கூட்டமாகவுள்ள நீவி ரெல்லீரும் எமக்கு மாறுகிய தோஷத்தினால்: இப்படியே பாரமாகிய இக் கருப்பத்தைச் சுமந்தபடி (கருவுயிர்த்தலின்றி) இருப்பீர்களாக எனச் சாபமிட்டார் என்பது கருத்து.

எமக்கு மாறுகிய திறம் நாம் அடையவேண்டிய கருப்பத்தை நீவிர் அடைந்தமை. கனம் - பாரம்.

[இங்கே பார்ப்பதி யம்மையார் தம்மோடு அபின்னமாகிய இந் நவசத்திகள் தம் நாயகராகிய சிவபிரான்மீது ஆசைவைத்தார்க ளென்ற பொறாமைகொண்டு சபித்தனரோ வெனின் அற்றன்று; பின் எதன் பொருட்டெனில் ஒருத்தியின் கணவனிடத்து இன்னொருத்தி காதல் கொள்ளுதல் தகாதென்பதை உலகமாதாவாகிய ஈசுவரி தமது பிள்ளைகளாகிய உலக மகளிருக்குக் காட்டி வைத்தற்காகிய நடிப்புமாத்திரையா மெனக; மேலைத் திருவிருத்தத்திலும் பரிக்கிரக சத்திகளாகிய நவசத்திகள் இறைவனைக் காதலித்துக் கருப்பமுற்றன ரென்பதும், அரிபிரமேந்திராதி தேவர்களுக்கு நேர்ந்த இன்னலை நீக்குதற்குச் சிவபிரான் செய்யும் திருவிளையாடல்களு ளொன்றென வுணர்க] (10)

### இலங்கையில் சிங்கள ராஜ்யம்

3-ம் பக்கத் தொடர்ச்சி

யின் சிபாரிசு. ஆனால் இந்தச் சிபாரிசின்படி தமிழுக்கும் மதிப்புக் கிடைக்குமா? இவ்விஷயத்தில் "சிலோன் டெயிலிநியூஸ்" என்னும் சேனநாயக்காக் கோஷ்டிப் பத்திரிகை கூறிய மொழிகள் எமக்கு முன்னெச்சரிக்கையாக விருக்கவேண்டும். அப்பத்திரிகையின் சென்ற 7-ம் திகதிப் பிரசுரத்தில், ஆசிரியர் கூற்றாக வந்த கட்டுரையில் அரசாங்கம் இரண்டு பாஷைகளையும் கொஞ்சக் காலத்துக்கு நல்லாய் அபிவிருத்திசெய்யவேண்டும்; அதன்பின் சிறந்த ஓர் பாஷையை அரசாங்க பாஷையாக்கும் விஷயத்தை அக்காலத்தில் நிச்சயிக்கலாம் அப்படிச் செய்வதை விடுத்து இப்போதே அரசாங்க பாஷைகளை நிர்ணயித்தல் சரியல்ல என்பதே அக் கட்டுரையின் சாரம். இன்னும்வெளி திறந்து கூறுவதென்றால், தமிழ் மக்கள் எல்லாரும் சிங்களத்தைப் பயிலவேண்டும். அப்படிப் பயின்றபின், இலங்கை முழுவதும், சிங்களத்தை இராச பாஷையாக்க வேண்டுமென்பதே அக் கட்டுரையின் மறைமுகமான கூற்று. இதுவே சேனநாயக்கா முதலியோரின் அந்தரங்க அபிப்பிராயமுமாம் என்பதனை விஷயமறிந்தவர் எவரும் ஒப்புக்கொள்வர். விஷயம் இந்த அளவில் நிற்கிறது. தமிழ்மக்கள் காற்று எந்தத்திசையில் அடிக்கிறது என்பதனை இப்போதே அவதானித்துக்கொள்ளுதல் நலம்.

### ஜப்பானிற் கொடிய பூகம்பம்

பல்லாயிரவர் இறந்தனராம்

1923-ம் ஆண்டில் ஜப்பானில் நிகழ்ந்த பொல்லாத பூகம்பத்தைப் போன்ற இன்னோர் பூகம்பம் ஜப்பானின் மத்திய பகுதியில் சென்ற சனிக்கிழமை நிகழ்ந்ததென்றும், இப்போது பிரிட்டிஷார் வசமுள்ள ஷிக்கோக்கு என்னும் தீவு நாசமடைந்துவிட்டதென்றும் செய்திகள் கூறுகின்றன.

மத்திய ஜப்பானில், இற்றைவரை கிடைத்துள்ள புதினங்களிலிருந்து 130000 வீடுகள் நாசமாயினவென்றும் ஆயிரக் கணக்கானோர் மாண்டனர் என்றும் தெரிகிறது.

இவ்விபத்துச்சம்பந்தமான பூரண விபரங்கள் இன்னும் கிடைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

### செவ்வாய் டிச 24

காலை 7.15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 டி எஸ் மரியானந்தர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 காலை இசை இசைத்தட்டு 8.30 நாகர் கோயில் ஜே சாம்ராஜ் புல்லாங்குழல் 9 முடிவு.

1 சதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 நாகர்கோயில் ஜே சாம்ராஜ் புல்லாங்குழல் 2 தமிழில்செய்திகள் 2.05 நாகர்கோயில ஜே சாம்ராஜ்புல்லாங்குழல் 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 தேசமங்கலம் சுப்பிரமண்ய ஐயர் வீணை இசைத்தட்டு 5.10 கறிஸ்தமஸ் தேவாராதனை 5 40 இசைப்பயிர்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6-15 கிராமநிகழ்ச்சிகள் 7 சிதம்பரம் ஜி அம்புஜவல்லி பாட்டு 7-30 தமிழில் செய்திகள் 7-45 தியாகராசர் ஆராதனை வைபவம் 8 டி எஸ் மரியானந்தர் பாட்டு 8-30 சிதம்பரம் ஜி அம்புஜவல்லி பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 9 பக்தநந்தனர் (இசைத்தட்டு) 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9 45 தென்னிந்திய நாட்டுப் பாடல்கள் 10 மதராசிலுள்ளபடி 10-30 முடிவு.

### புதன் டிச 25

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 என் எஸ் சந்திரசேகரன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 காலை இசை 8.30 வரகூர் முத்துச்சாமிஐயர் வயலின் 9 முடிவு.

1 சதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 என் எஸ் சந்திரசேகரன் பாட்டு 2 தமிழில் செய்திகள 2.05 என் எஸ் சந்திரசேகரன் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை 5 என் கேசி புல்லாங்குழல் 5-10 கிறீஸ்துமஸ் தேவாராதனை 5.40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள 7 வரகூர் முத்துசாமிஐயர் வயலின் 7 20 தமிழில செய்திகள் 7-15 திரை படியர்சனம் 8 இசைவேளை 8-15 மதாசிலுள்ளபடி தமிழ்ச விழா 9 ஆங்கிலத்தில செய்திகள் 9-15 ஐரோப்பிய சங்கீதப 9.30 லண்டனவிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9-15 மகாகவேத நாடகம 10-30 முடிவு.

### வியாழன் டிச 26

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 திருவாரூர் டி ஆர் திலகம் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 காலை இசை 8-30 ஆர் கிருஷ்ணமூர்த்திஐயர் வீணை 9 முடிவு.

1 சதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 திருவாரூர் டி ஆர் திலகப்பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 திருவாரூர் டி ஆர் திலகம் பாட்டு 2.15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை 5 சிதம்பரம் கே கோமதிபாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில்செய்திகள்6.10அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 குரல்வகை 7-15 செய்தி விளக்கம் 7.30 தமிழில் செய்திகள 7.45 சிதம்பரம் கே கோமதி பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 தகப்பாலப 9-30 லண்டன் விருந்த செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 இருவயலின்கள் 10 இசைவேளை 10.30 முடிவு.

### வெள்ளி டிச 27

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள 7.30 டி எம் சண்முகசுந்தரம் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருச்சி வாத்யகோஷ்டி 8-30 எம் எஸ் சகுந்தலாதேவி, எம் எஸ் கமலாதேவி பாட்டு 9 முடிவு.

1 சதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள 1-40 டி எம் ஷண்முகசுந்தரம் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 டி எம் ஷண்முகசுந்தரம் பாட்டு 2.15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை 5 தஞ்சாக்குட்டி ரவிவர்மா பாட்டு 5-40 குரான் ஷரீப் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 தங்கச்குட்டி ரவிவர்மா பாட்டு 7-30 தமிழில் செய்திகள 7-45 நடுபவர் 8 திருவாவடுதுறை என் ராஜரத்தினம்பிள்ளை நாகஸ்வரம 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 குரல்வகை 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9-45 ஜே எம் அப்துல்கனி ஸிதார் 10.30 ஒலிபரப்பு முடிவு


## கந்தசாமி வைத்தியர்
### அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையுந் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற் புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளைமாற்றி நல்ல பசிஉண்டாக்கும் மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பனிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக் காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் காற் கழஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்.

**கால் ருத்தல் விலை ரூபா 5-00**

வீ. பீ. பீ. யில் அனுப்புவோம்

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மேடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

Mis 211 1-11—30-4 (செ)



## பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருருத்தல் விலை ரூபா 25
அரைருத்தலுக்கு ரூபா 12-50
கால்ருத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**
கி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis 25 23-4-46 to 22-3-47)



## நற்சாட்சிப் பத்திரங்கள்

ஜீவாதார வைத்தியசாலையில் நமது மனைவி (Hysteria) வாய்வுக்கு, தாவடி ஸ்ரீமான் க. த. அப்பாத்துரைப்பிள்ளையிடம் 3 வேளை மருந்து சாப்பிட்டபின் பூரண சுகமடைந்ததை இத்தால் சகலருக்கும் அறிவிக்கிறேன்.

இங்ஙனம்,
த. சின்னத்துரை,
தாவடி.

ஜீவாதார வைத்தியசாலையில் தாவடி ஸ்ரீமான் க. த. அப்பாத்துரை அவர்களின் மருந்துகளை இரண்டுநேரம் உட்கொண்டதினுல், நாலு வருஷ காலமாகக் கஷ்டப்பட்டிருந்த தொய்வு வியாதியால் மீளப்பெற்று மூன்று மாதத்தின் பின் இதை வெளியாக்குகிறேன்.

இங்ஙனம்,
லோறன்ஸ் மிக்கேல்,
கரையூர்.

(Mis 195 22-10 to 21-1-47)



விளம்பரமின்றேல் பெரும் பணமில்லை



## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி
1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,3670**
**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.
மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகோள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Mis 246 20-11-46—20-11-47 (தி)



## NEW IRON SAFES FOR SALE
## புதிய இரும்புப் பெட்டிகள்
### விற்பனைக்கு வந்துவிட்டன

யுத்த காலத்திற்குப்பின் இதுவே முதல் இறக்குமதி
வியாபார ஸ்தலங்களுக்கும், வீடுகளுக்கும், அடைவுகடைகளுக்கும் பாவிப்புக்கு ஏற்றஅளவுகளில் குறைந்தவிலையில்திறமான நூதனமுறைக்கமைக்கப்பெற்ற இரும்புப்பெட்டிகள் விற்பனைக்குத் தயாராக இருக்கின்றன. தங்களுக்குத் தேவையான பெட்டிகளை கீழ்க் காணும் விலாசத்தில் நேரில் பார்த்து தெரிந்து கொள்ளுங்கள்.

ஸ்ரீ பத்மநாத ஸ்ரோர்
பெரியகடை, யாழ்ப்பாணம்.

Tele {Phone 68
grams SIRIRANGAN

**S. S. PONNUDURAI**
**Siri. Pathmanatha Store**
105. K. K. S. ROAD
Grand Bazaar JAFFNA.

Mis 270 13-12 46—12-3-47



## India Super Tyres and Tubes
## இந்தியா சுப்பர் ரையர் & ரியூப்
கார் லொறி சைஸ்கள்

ரையர் கட்டுப்பாடு நவம்பர் மாசம்
21-ந்உ. யுடன் முடிவடைந்து விட்டது.

எங்களிடம் சொற்பதொகையே இருப்பதால்
தேவையானதற்கு இப்பொழுதே உங்கள்
பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்

**C. S. Nadarajah Chetty,**
41, K. K. S. Road, **JAFFNA.**

Mis 257 3-12—28-2-47


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.


Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday, Desember, 24, 1946.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org